[1995 ஏப்ரல் 24

முற்பகல் 10-15

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இப்போது எல்லோரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

*மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:* ஆகையால், இதிலே நீங்கள் எந்த இடத்திலே வேண்டுமானாலும், மாண்புமிகு பரமசிவம் அவர்கள்கூட அவர்களுடைய தொகுதிக்குச் சென்று, 5 கிராமங்களுக்குப் போய் பார்த்துவிட்டு, நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தில் இன்னின்ன குறை இருக்கிறது என்று என்னிடத்திலே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படி அமைச்சரும் சொல்லவேண்டும், சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்ல வேண்டும். இப்போதுகூட வருகிற சனி, ஞாயிறுகளில் போய் 5 கிராமங்களைப் பார்த்து, இந்த இடத்திலே தவறு இருக்கிறது என்று சொன்னால், அதற்குப் பிறகு இந்தச் சட்டமன்றம் முடிவதற்குள்ளேகூட, வருவாய்த் துறை அதிகாரிகளை அனுப்பி இன்னின்ன இடத்திலே தவறு இருக்கிறது, இந்தமாதிரி தவறு இருக்கிறது. இந்த உரிமையாளரிடம் தவறு இருக்கிறது என்று சொல்லி, கேட்டு, இந்தச் சட்டமன்றம் முடிவதற்கு முன்பேகூட நான் உங்களுக்குப் பதில் தருவேன் என்பதை மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 402, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உணவு அமைச்சர்.

**402—**

## பகுதி நேர கூட்டுறவு அங்காடி அமைத்தல்

***17518**—*திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், முத்தாக்குறிச்சி பஞ்சாயத்து, சிலம்பவளங்காடு கிராமத்திற்கு பகுதிநேர கூட்டுறவு உணவுப் பொருட்கள் வழங்கும் அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள முத்தாக்குறிச்சி பஞ்சாயத்து சிலம்பவளங்காடு கிராமத்திற்கு உணவுப் பொருள் வழங்கும் பகுதிநேர அங்காடி ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டது.

1995 ஏப்ரல் 24]

*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபிறகு நான் இந்த கேள்வி போட்டபிறகு, இந்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து அங்கே பகுதிநேர அங்காடி அமைத்ததற்கு, அதுபற்றி அமைச்சர் அவர்கள் தக்க விளக்கம் அளித்ததற்கு, என் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும், தமிழக முதல்வர் அவர்களுக்கும், உணவு அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து அமைகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 403, திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**403—**

## மருத்துவக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம்

***10862-எ—** *திரு. வி.கே. லட்சுமணன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் கல்விக் கட்டணத்தை உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எந்தக் கல்வி ஆண்டிலிருந்து உயர்த்தப்படும்?

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1993-94-ஆம் ஆண்டு முதல் டாக்டர் அனந்தகிருஷ்ணன் குழுவின் பரிந்துரையின்படி, அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் கல்விக் கட்டணம் ஆண்டொன்றுக்கு ரூ. 4,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதற்கு மேல் உயர்த்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*டாக்டர் ஜெ. பரந்தாமன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போஸ்ட் கிராஜுவேட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி கோர்ஸ்ஸில், கிளினிக்கல் எக்ஸ்பீரியன்ஸ் காலத்தை அதிகப்படுத்தி நிறைய அனுபவ பயிற்சி பெற சிறிதளவு கூடுதல் கட்டணம் மாணவர்களிடமிருந்து வசூலிக்க அரசு ஆவன செய்யுமா?

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போஸ்ட் கிராஜுவேட் மற்றும் சூப்பர் ஸ்பெஷாலிட்டியைப் பொறுத்தவரை, இப்போது போஸ்ட் கிராஜுவேட்டிலே இரண்டு ஆண்டுக்காலம்